செய்தி வெளியீடு எண்: 557 நாள் : 5.11.2015

வடகிழக்கு பருவம் தீவிரமடைந்துள்ள நிலையில், தமிழ்நாட்டில் வேளாண் செயல்பாடுகள் முழுவீச்சில் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது குறித்து மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வேளாண்மைத் துறை உள்ளிட்ட அனைத்து சகோதரத் துறைகளிலும் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகள் செயலாக்கம் குறித்து 4.11.2015 அன்று வேளாண்மை இயக்குநரகத்தில் ஆய்வு மேற்கொண்டார்கள்.

இவ்வாய்வுக் கூட்டத்தில் வேளாண்மைத்துறை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., வேளாண்மைத்துறை இணைச்செயலர் திரு. செ.ராஜேந்திரன், இ.ஆ.ப., வேளாண்மைத்துறை இயக்குநர் முனைவர் மு. ராஜேந்திரன், இ.ஆ.ப., தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் திரு. லி. சித்திரசேனன், இ.ஆ.ப., வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் திரு. செ. மனோகரன், இ.ஆ.ப., மற்றும் வேளாண்மை பொறியியல் துறை தலைமைப் பொறியாளர்கள் திரு. கே.பி. ராமகிருஷ்ணன் மற்றும் திரு. க.தமிழ்ச்செல்வன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வேளாண்மைத்துறை குறித்த ஆய்வில், இதுவரை துவரை சாகுபடி குறித்த விபரம் கேட்டறிந்ததுடன் தமிழ்நாட்டில் பயறுவகைகளின் உற்பத்தியை கூட்டும் வகையில் மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும், உரத்தட்டுப்பாடு ஏற்படாதவாறு கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவும், தேசிய பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் அதிகளவிலான விவசாயிகளை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தினார்கள்.

தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டப்பணிகள் அனைத்தும் துரிதமாக முடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தியதுடன் சொட்டுநீர் பாசனத் திட்டம் அனைத்து தரப்பினரையும் சென்றடைய அறிவுரை வழங்கினார்கள்.

மேலும் வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் வழங்கப்படும் வேளாண் கருவிகள் மற்றும் உபகரணங்கள், தமிழ்நாடு நீர்வடி பகுதி மேம்பாட்டு முகமையின் மூலம் செயல்படுத்தப்படும் நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டப்பணிகள் அனைத்தும் அனைவரும் பயனடையும் வகையில் விரைந்து பணிகளை செயலாக்கம் செய்திட அறிவுரை வழங்கினார்கள்.

மேலும், அனைத்து திட்டங்களிலும் பயனாளிகளை வெளிப்படையான முறையில் முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்து திட்ட பயன்கள் விரைவாக சென்றடைய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேளாண்மை மற்றும் சகோதரத்துறை சார்ந்த மாவட்ட அளவிலான அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**